பக்கங்கள்:-18

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | கார்த்திகை 21 | வெள்ளிக்கிழமை | 08.12.2023 | அதிர்வு 129

தமிழுக்குப் பெரும் பங்காற்றிய

## பேராசிரியர் யோகராசா கொழும்பில் காலமானார்



கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஓய்வுநிலை பேராசிரியர் செ.யோகராசா நேற்று கொழும்பில் காலமானார். 06

அரசமைப்புக் கவுன்ஸில் விவகாரம்:

# தேசிய வாழ்விலிருந்து தமிழரை வெளியேற்றும் தெற்கின் சதித் திட்டம்!

## சுமந்திரன் எம்.பி. காட்டம்



– கி.வசந்தரூபன் –

அரசமைப்புக் கவுன்ஸிலில் வடக்கு - கிழக்கைப் பிரதிநிதித்துவப்படும் தமிழர் ஒருவர் கூட இல்லாமல் இருப்பது எங்களைத் தேசிய வாழ்க்கையில் இருந்து வெளியேற்றுவதற்கான ஒரு நடவடிக்கை என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 06

## தமிழர்களுக்கு உரிமை வழங்கப்பட வேண்டும்



**பிரிவினைவாதத்தையும் தடுக்க வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்து**

"தமிழர்களுக்கு அவர்களின் உரிமை வழங்கப்பட வேண்டும். தமிழர்களுக்கு உரிமை வழங்கப்படும் நிலையில் பிரிவினைவாதம் தோற்றம் பெறுவதையும் தடுக்க வேண்டும்."

– இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வலியுறுத்தினார். 03




நாடு என்ன கேடு கெட்டாலும் நாட்டின் சொத்தை விற்கும் பண்பு மட்டும் நம்மை விட்டு நீங்காது போலும்.

அநியாய – அறா வட்டிக்கு – கடன் வாங்கி, வீணே பல்லாயிரம் கோடி ரூபா கொட்டிச் செலவழித்த அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை 99 வருடங்களுக்குக் குத்தகைக்குச் சீனாவுக்குத் தாரை வார்த்தாகிவிட்டது.

உலகின் பல்வேறு விமான சேவை நிறுவனங்களும் கோடி கோடியாய் 03

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



# யாழில் பரபரப்பை ஏற்படுத்திய வாள்வெட்டு: கைதான 4 பேருக்கும் 19 வரை விளக்கமறியல்

**(எஸ்.நிதர்ஷன்)**

வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைதான நால்வரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் – தெல்லிப்பழை பகுதியில் ஹயஸ் வானில் வந்த வன்முறைக் கும்பல் மேற்கொண்ட வாள் வெட்டு வன்முறைச் சம்பவமும் அதனுடன் தொடர்ச்சியாகப் பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகமும் குடாநாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு சந்தேகநபர்கள் இதுவரை கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேகநபர்களும் தெல்லிப்பழை பொலிஸார் ஊடாக மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தப்பட்ட வேளை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் பணிப்புக்கமைய யாழ்ப்பாணம் பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவு மற்றும் காங்கேசன்துறை பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் தீவிர விசாரணைகளில் ஈடுபட்டு குறித்த வன்முறைச் சம்பவத்துடன் தொடர்புடைய நால்வரைக் கைது செய்ததுடன் மேலும் மூவரைத் தேடி வருகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை மாலை 5.30 மணியளவில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையம் அருகில் ஹயஸ் வாகனம் ஒன்றில் வந்த இனந்தெரியாத கும்பல் வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் மீது வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியது.

இதில் அளவெட்டியைச் சேர்ந்த 28 வயதான இளைஞர் ஒருவர் காயமடைந்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

தொடர்ச்சியாக ஹயஸ் வானில் தப்பிச் சென்ற வன்முறைக் கும்பலைப் பொலிஸார் துரத்திச் சென்ற போதும் வன்முறைக் கும்பல் வேகமாகச் சென்று மல்லாகம் பகுதியிலும் வன்முறையில் ஈடுபட்டு ஒருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியது.

இது தொடர்பிலான சிசிரிவி காணொலி வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

இதன்போது பொலிஸார் ஹயஸ் வான் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதில் வானின் ரயர் பகுதி சேதமடைந்த போதும் வன்முறைக் கும்பல் சுன்னாகம் ஊடாகத் தப்பிச் சென்றது.

மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம் அருகில் வீதியில் இருந்து வாள்கள் மற்றும் துப்பாக்கி ரவைகள் என்பனவும் பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டன.

காயமடைந்தவர்களின் வாக்குமூலம், சிசிரிவி காணொளி என்பவற்றைக் கொண்டு பொலிஸார் பல்வேறு கோணங்களிலும் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்நிலையில் அன்றைய தினமே வன்முறைச் சம்பவத்தின் சந்தேகநபர் ஒருவர் காங்கேசன்துறை பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

தொடர்ச்சியாக யாழ்ப்பாணம் பிராந்திய குற்றத் தடுப்புப் பொலிஸாரால் நடத்தப்பட்ட விசாரணையில் மூன்று சந்தேக நபர்கள் நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் வைத்துக் கைது செய்யப்பட்டதுடன் வன்முறைக்குப் பயன்படுத்தப்பட்ட ஹயஸ் வான், இரண்டு வாள், முகம் மறைக்கப் பயன்படுத்தப்பட்ட துணி, ரீசேட், ஹயஸ் வானை உருமாற்றம் செய்யும் வகையில் வானில் இருந்து உரிக்கப்பட்ட ஸ்ரிக்கர் என்பனவும் கைப்பற்றப்பட்டன.

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்புப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் ஹயஸ் வான் கைப்பற்றப்பட்டது. கோப்பாய் – கைதடி இடையில் உள்ள மயானமொன்றில் மறைக்கப்பட்ட நிலையில் இரண்டு வாள், முகம் மறைக்க பயன்படுத்தப்பட்ட துணி, ரீசேட் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

இரண்டு தரப்பினரிடையே நீண்டகாலமாக இருந்த பழிவாங்கும் எண்ணத்தின் அடிப்படையில் கொலை செய்வதற்கான முயற்சியே இந்த வன்முறைச் சம்பவத்துக்குப் பிரதான காரணம் எனப் பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் தொடர்புடைய நால்வர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ள நிலையில் நால்வரும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் மூவர் இனங்காணப்பட்டுள்ள நிலையில் மூவரும் தலைமறைவாகியுள்ளனர் எனவும், அவர்கள் எந்நேரமும் கைது செய்யப்படலாம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## தமிழர்களுக்கு உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஐக்கிய நாடுகள் சபையுடன் இணக்கமாகச் செயற்படுகின்றோம். நாட்டின் சுயாதீனத் தன்மையை விட்டுக் கொடுத்துச் செயற்படவில்லை. அதேபோல் பிற நாடுகளின் கட்டளைகளுக்கு அமைய நாட்டை நிர்வகிக்கப் போவதில்லை.

சீனா, இந்தியா, அமெரிக்கா, மேற்குலக நாடுகள் உட்பட சகல நாடுளுடனும் இணக்கமாகச் செயற்படுகின்றோம். எந்த நாட்டையும் பகைத்துக்கொள்ள வேண்டிய தேவை இல்லை. கனடா மாத்திரம் இலங்கையின் விவகாரத்தில் எதிர்மறையான நிலைப்பாட்டில் உள்ளது.

தமிழர்களுக்கு அவர்களின் உரிமை வழங்கப்பட வேண்டும். தமிழர்களுக்கு உரிமை வழங்கப்படும் நிலையில் பிரிவினைவாதம் தோற்றம் பெறுவதையும் தடுக்க வேண்டும். ஆகையால் எம்மால் இரு முனைகளில் இருந்துகொண்டு செயற்பட முடியாது. எனவே, ஒருமித்த நாட்டுக்குள் அனைவருக்கும் சமவுரிமை வழங்கப்படும்.

கடன் மறுசீரமைப்பு விவகாரத்துக்கு இலங்கையின் பிரதான நிலை நாடுகள் ஒத்துழைப்பு வழங்கியுள்ளன. பிளவுபடாத வெளிவிவகாரக் கொள்கையால்தான் இந்த முன்னேற்றத்தை எம்மால் அடைய முடிந்துள்ளது. இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு சீனா, இந்தியா உட்பட பெரிஸ் கிளப் நாடுகள் ஆரம்பத்தில் இருந்து ஒத்துழைப்பு வழங்கியுள்ளன. சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்டக் கடன் தொகை எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கும் சாத்தியமுள்ளது." - என்றார்.

## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலாபமீட்ட, இலங்கையின் ஏக விமான சேவை நிறுவனமான 'ஸ்ரீலங்கன்' மட்டும் முழு நட்டத்தில் - தாங்க முடியாத இழப்பில் - இயங்கிக் கொண்டிருக்கின்றது. அதைத் தனியார் நிறுவனம் எதற்கும் விற்றாவது நஷ்டத்தைச் சமாளிக்கலாம் என்ற தீவிர முயற்சியில் அரசு உள்ளது.

அப்படி நிறுவனக் கைமாற்றத்தில் இடையில் எவ்வளவு சுருட்டலாம் என்று அதிகார வர்க்கம் கண்கொத்திப் பாம்பாக காத்திருப்பதாகவும் தகவல்.

இதற்கிடையில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துடன் ராஜபக்ஷக்கள் பல்லாயிரம் கோடி ரூபாவை கொட்டி வீணாக்கிய மற்றைய திட்டம் மத்தளை சர்வதேச விமான நிலையம் ஆகும்.

இப்போதும் கூட, வட்டிக்கும் பிற செலவுகளுக்குமாக மாதாந்தம் 100 கோடி ரூபாவுக்கு மேல் வீண் நஷ்டமாக விழுங்கிக் கொண்டிருக்கும் வெள்ளை யானை அது.

இப்போது அதையும் பெரிய நிறுவனம் ஒன்றுக்கு குத்தகைக்கு கொடுக்க அரசு தயாராகிவிட்டது. ரஷ்ய - இந்தியக் கூட்டு நிறுவனத்திற்கு மத்தளை சர்வதேச விமான நிலையத்தை நிர்வகிக்கும் பொறுப்பை ஒப்படைப்பது தொடர்பான பேச்சுக்கள் கடந்த ஐந்தாம் தேதி வெற்றிகரமாக முடிவுற்றிருக்கின்றன என துறைமுகங்கள், விமான நிலையங்கள் அமைச்சின் செயலாளர் எஸ். ருவன்சந்திர கூறி இருக்கின்றார்.

விமான நிலைய ஊழியர்களின் வேதனத்தையும் அந்த நிறுவனமே வழங்கவிருக்கின்றதாம்.

ராஜபக்ஷக்கள் எல்லை மீறிய வட்டிக்குத் தேவையில்லாமல் கடன் வாங்கி, வீணே செலவழித்த திட்டங்களுக்குத் தொடர்ந்தும் வட்டி செலுத்த முடியாமல் நாடு அவற்றை ஒவ்வொன்றாக அந்நிய சக்திகளுக்கு விற்றுத் தள்ளிக் கொண்டிருக்கின்றது.

நாட்டின் பொருளாதாரத்தை அதலபாதாளத்தில் வீழ்த்தியவர்களில் ராஜபக்ஷகளுக்குக் கணிசமான பங்கு உண்டு என்று உயர் நீதிமன்றமே தீர்ப்பளித்து விட்டது. ஆனாலும் நாட்டு அரசின் லாகன் இன்னும் அவர்களின் கைகளில் தான் உள்ளது. இதுதான் நாட்டின் பெரும் துரதிஷ்டம்.

தவறிழைத்தோர் அதிகாரத்தில் தொடர்ந்து நீடிக்க முடியும் என்ற மாபாதக நிலைமை தொடரும் வரை இந்த நாடு உருப்படப் போவதில்லை.



# தனியார் துறைக்கும் சம்பள அதிகரிப்பு வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ஜே .வி.பி. எம்.பி. விஜித ஹேரத் கோரிக்கை



"அரச ஊழியர்களுக்கு ஏப்ரல் மாதம் முதல் 10 ஆயிரம் ரூபா வாழ்க்கைச் செலவு கொடுப்பனவாக வழங்கப்படுமென அரசு அறிவித்துள்ள நிலையில் 65 இலட்சம் ஊழியர்கள் இருக்கும் தனியார் துறைக்கு எந்த நிவாரணத்தையும் அறிவிக்கவில்லை. எனவே, வரவு - செலவுத் திட்ட நிவாரண சட்டத்தைக் கொண்டு வந்து தனியார் துறைக்கும் சம்பள அதிகரிப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்."

– இவ்வாறு ஜே .வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானதன் பின்னர் மின் கண்டனம் நூற்றுக்கு 440 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால், வரவு - செலவுத் திட்டத்தில் தனியார் துறை தொடர்பாக எந்த ஏற்பாடுகளும் இல்லை. நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்படும்போது அரச ஊழியர்களுடன் தனியார் ஊழியர்களும் பாதிக்கப்படுக்கின்றனர்.

அரசு வரியை நூற்றுக்கு 18 ஆக அதிகரித்திருக்கின்றது. இந்த வற் வரி அதிகரிப்பில் தனியார் துறையினரும் அடங்குகின்றனர். வற் வரி அதிகரிப்பின் மூலம் அரசு 859 பில்லியன் ரூபாவை எதிர்பார்க்கின்றது. அரசு 65 இலட்சம் தனியார் துறை ஊழியர்களிடமே இந்தத் தொகையைப் பெற்றுக்கொள்ள இருக்கின்றது. ஆனால், தனியார் துறைக்கு எந்த நிவாரணமும் இல்லை.

2005 இல் வரவு- செலவுத் திட்டத்தில் வரவு - செலவு நிவாரணச் சட்டம் ஒன்று கொண்டுவந்து தனியார் துறைக்கு ஆயிரம் ரூபா சம்பளம் அதிகரிக்கப்பட்டது. அதேபோன்று 2016இல் வரவு - செலவுத் திட்ட நிவாரணச் சட்டம் கொண்டுவந்து 2 ஆயிரத்து 500 ரூபா அதிகரிக்கப்பட்டது. எனவே, இம்முறையும் அரசு வரவு - செலவுத் திட்ட நிவாரணச் சட்டத்தைக் கொண்டுவந்து தனியார் துறைக்கும் சம்பள அதிகரிப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

தோட்டத்தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் பெற்றுக்கொடுத்தோம். அதுவும் சில தோட்டங்களில் நீண்ட காலத்துக்குப் பின்னரே வழங்கப்பட்டது. அதுவும் சில தோட்டங்களில் முறையாக வழங்கப்படுவதில்லை. ஆனால், இன்று ஆயிரம் ரூபாவில் நாள் ஒன்றுக்கான செலவைப் பூர்த்தி செய்ய முடியாமல் இருக்கின்றது. அதனால் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 2 ஆயிரம் ரூபாவாவது வழங்க வேண்டும்."

– என்றார்.

# வடக்கின் அபயம் குறைகேள் வலையமைப்பு

## குறுகிய காலத்துக்குள் நூற்றுக்கணக்கான முறைப்பாடுகளுக்குத் தீர்வு




(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாண ஆளுநரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் செயற்படும் அபயம் குறைகேள் வலையமைப்பால், குறுகிய காலத்திற்குள் 250 க்கும் மேற்பட்ட முறைப்பாடுகளுக்கான தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் அபயம் குறைகேள் வலையமைப்பு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பொதுமக்கள் எதிர்நோக்கும் சிக்கல்களை அபயத்திற்கு அறிவிப்பதன் ஊடாக ஒரு வாரத்திற்குள் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

உணவு மற்றும் ஊட்டச்சத்து, கல்வி மற்றும் சுகாதாரம், பாதுகாப்பு, உளவளம், சிறுவர், இளையோர் மற்றும் மகளிர் விவகாரம் உள்ளிட்ட பிரிவுகளில் மாணவர்கள், சிறார்கள் மற்றும் பொதுமக்கள் எதிர்நோக்கும் சிக்கல்களுக்கான தீர்வுகளை அரச பொறிமுறையின் ஊடாக அபயம் குறைகேள் வலையமைப்பினால் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது.

வட மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் முறைப்பாடுகள் கிடைக்கின்ற போதிலும், யாழ். மாவட்டத்திலேயே அதிகளவான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் சிக்கல்கள் தொடர்பிலேயே அதிக முறைப்பாடுகள் அபயம் குறைகேள் வலையமைப்புக்குக் கிடைத்துள்ளதுடன், அவற்றுக்கான தீர்வுகளும் உடன் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண ஆளுநரின் நேரடி கண்காணிப்பின் கீழ் அபயம் வலையமைப்பு செயற்படுகின்றது. வடக்கு மாகாணத்தின் எந்தப் பகுதியில் வசிப்பவராக இருந்தாலும், முறைப்பாடுகளைச் சமர்பிக்க முடியும். முறைப்பாடுகள் செய்வோரின் தகவல்கள் இரகசியமாகப் பாதுகாக்கப்படும்.

070 666 66 77 என்ற இலக்கத்திற்கு அழைப்பை மேற்கொள்வதன் மூலமும், வட்ஸ்அப், வைபர் ஊடாகவும் முறைப்பாடுகளைப் பதிவு செய்ய முடியும். childhelpnp@gmail.com என்ற மின்னஞ்சலுக்கும், அபயம் - ஆளுநர் செயலகம், வடக்கு மாகாணம், பழைய பூங்கா,சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் முறைப்பாடுகளை அனுப்பி வைக்க முடியும். அத்துடன் ஆளுநர் செயலகத்திற்கு நேரடியாக வருகை தந்து எழுத்துமூலம் உங்களின் மனுக்களை சமர்ப்பிக்க முடியும். அபயம் குறைகேள் வலையமைப்பானது 24 மணித்தியால சேவையை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. - என்றுள்ளது.

# கிளிநொச்சியிலிருந்து அகதியாகத் தமிழகம் சென்ற குடும்பஸ்தர் ரயிலுடன் மோதி மரணம்

## மண்டபம் முகாமில் மனைவியும் மூன்று பிள்ளைகளும் தவிர்ப்பு



(ந.லோகதயாளன்)

இலங்கையில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாகக் கடந்த வருடம் அகதியாகத் தமிழகம் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் ரயிலுடன் மோதி உயிரிழந்துள்ளார்.

24.11.2022 அன்று கிளிநொச்சி, ஐயனார்புரம் பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் கணேசமூர்த்தி (வயது 34) என்ற நபர் தனது மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளுடன் மன்னாரிலிருந்து படகு மூலம் தமிழகத்தின் தனுஸ்கோடிக்குச் சென்று மண்டபம் முகாமில் வசித்து வந்தார்.

இந்நிலையில், கணேசமூர்த்தி என்பவர் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் மண்டபம் முகாம் அருகிலுள்ள மரைக்காயர்பட்டணம் அருகில் ரயிலுடன் மோதுண்டு உயிரிழந்துள்ளார்.

அவரின் சடலம் இராமேஸ்வரம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# அரச உத்தியோகத்தர்களைக் கடமை புரிய விடாது இடையூறுகளை ஏற்படுத்தும் சந்தை வியாபாரிகள்

## பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு


(எஸ்.நிதர்ஷன்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட சங்கானை மரக்கறி சந்தையில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளைப் பதிவு செய்து அவர்களை அடையாளப்படுத்தி வியாபார நடவடிக்கைகளை தடையின்றி மேற்கொள்வதற்கு இலகுவாக்குவதற்கு பிரதேச சபை வியாபாரிகளின் விபரங்களை பதிவு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இதற்கு தடையேற்படுத்தும் வகையில் வியாபாரிகள் சிலரும் அவர்களுடன் இணைந்த வெளியாட்கள் சிலரும் இணைந்து பதிவுகளை மேற்கொண்டுவரும் பிரதேச சபையின் அரச உத்தியோகத்தர்களுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதுடன் அவர்களைத் தாக்குவதற்கும் முயற்சித்தும் உள்ளார்கள்.

இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் பிரதேச சபையினர் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்கள்.

சந்தையில் வியாபாரம் செய்யும்போது சில பிரச்சினைகள் பொதுமக்கள் மத்தியில் ஏற்படுவதால் பிரதேச சபை இதனைக் கருத்தில் எடுத்து பதிவு நடவடிக்கைகளை மேற்கொண்டு வியாபாரிகளை அடையாளம் காண்பதற்கும், அவர்கள் வியாபார நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்குமான நடவடிக்கைகளை பிரதேச சபை மேற்கொண்டு வருகின்றது. இத்தகைய நடவடிக்கைகளைக் குழப்பும் வகையில் சில வியாபாரிகள் தரக் குறைவான வார்த்தைப் பிரயோகங்களைக் கூறித் தாக்க முற்பட்டு அரச உத்தியோகத்தர்களது பணியைச் செய்யவிடாது தடுத்துள்ளார்கள். இதற்கு எதிராகப் பொலிஸார் சட்ட



வலிகாமம் மேற்கு பிரதேச சபை
VALIKAMAM WEST PRADESHIYA SABHA
CHULIPURAM

Your No
My No
E-mail: valiwestps@gmail.com
Date: 06.12.2023

நடவடிக்கை எடுத்து அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிபடுத்த வேண்டும் என்று வலிகாமம் மேற்கு பிரதேச சபையினர் கோரிக்கை முன்வைத்துள்ளார்கள்.

# நெடுந்தீவில் கைதான இந்திய மீனவர்கள் 13 பேருக்கும் 21 ஆம் திகதி வரை மறியல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் - நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்ட 13 இந்திய மீனவர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவுப் பகுதியில் 3 படகுகளுடன் 13 இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் நேற்றுமுன்தினம் கைது செய்திருந்தனர்.

இவ்வாறு கைதான 13 இந்திய மீனவர்களும் நேற்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் பதில் நீதிவான் சரோஜினிதேவி இளங்கோவன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போது அவர்களை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.



## பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்

# தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை உடனடியாக விடுவிக்க வேண்டும்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தன்னிச்சையாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரையும் இலங்கை அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

இந்தச் சட்டம் இரத்துச் செய்யப்படும் வரை அதன் பயன்பாட்டுக்குத் தடை விதிக்க வேண்டும் எனவும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

இறுதிப் போரில் உயிரிழந்தோரை நினைவுகூர்ந்தமைக்காக 9 பேர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்து கண்காணிப்பாகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

சிறுபான்மை இனத்தவர் மற்றும் சிவில் சமூக ஆர்வலர்களைத் தன்னிச்சையாகத் தடுத்து வைத்து சித்திரவதை செய்வதற்கு நீண்டகாலமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மாற்றியமைக்கப்படும் என இலங்கை அரசு சர்வதேச நட்பு நாடுகள், வர்த்தக பங்காளிகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபைக்குப் பலமுறை உறுதியளித்துள்ளது என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பாகம் சுட்டிக் காட்டியுள்ளது.

உள்நாட்டுப் போரில் இறந்தவர்களை நினைவுகூரும் தமிழர்களுக்கு எதிரான பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவது கொடூரமான துஷ்பிரயோகம் என்பதுடன், தொடர்ச்சியாக ஒரு சமூகம் ஓரங்கட்டப்படுகின்றது என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நல்லிணக்கம் தொடர்பில் பேசுகின்ற போதிலும், அவரது அரசின்நடவடிக்கைகள் இனப் பிளவுகளை மேலும் ஆழப்படுத்துகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், பிரித்தானியா, இலங்கையின் சர்வதேச பங்காளர்கள், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர்




அலுவலகம் ஆகியனவும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விமர்சித்துள்ளன.

அரசின் நிர்வாகம் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பான விமர்சனங்களை ஒடுக்குவதற்கும் இலங்கைஅரசுபயங்கரவாதத்தடைச்சட்டத்தைப் பயன்படுத்துகின்றது என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

அண்மையில் கொண்டுவரப்பட்ட உத்தேச நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் கருத்துச் சுதந்திரத்தை வரையறுக்கும் வகையில் அமைந்துள்ளது என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

---

### தேசிய வாழ்விலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வவுனியாவில் அமைந்துள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் கட்சியின் மாவட்டக் கிளையுடன் நேற்று மாலை இடம்பெற்ற சந்திப்பின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

"தமிழரசுக் கட்சியின் மாநாடு எதிர்வரும் ஜனவரி மாதம் இறுதியில் நடைபெறவுள்ளது. இந்தத் தடவை இம்மாவட்டத்தால் புதிய தலைவரைத் தெரிவு செய்யக் கூடிய சந்தர்ப்பம் இருக்கின்றது.

கட்சி உறுப்பினர்கள் கட்சி யாப்பின் அடிப்படையில் மூன்று பேரைத் தலைமைப் பதவிக்குப் பிரேரித்துள்ளார்கள். இந்த மூன்று பேரும் இறுதி வரைக்கும் தலைவர் தெரிவில் இருந்தால் யாப்பின் அடிப்படையில் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் பொதுச் சபை உறுப்பினர்கள் தலைவரைத் தெரிவு செய்வார்கள். வவுனியா மாவட்டத்தில் இருந்து பொதுச் சபைக்கு 23 பேர் அங்கம் வகிப்பார்கள்.

வவுனியா மாவட்ட கிளையானது தலைவர் தெரிவில் போட்டியிடுபவர்களைச் சந்தித்து உரையாட நேரம் கேட்டிருந்தார்கள். அதனடிப்படையில் சந்தித்து உரையாடினேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்தச் சந்திப்பு நடைபெறுகிறது." - என்றார்.

இதன்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தின் இந்தக் கூட்டத் தொடரை நிறைவுக் கொண்டு வரும் வகையில், நாடாளுமன்றத்தை இடைநிறுத்த முயற்சிக்கின்றார் என எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன, இது தொடர்பில் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர் கூறிய பதில் வருமாறு:-

"நாடாளுமன்றக் கூட்டத் தொடரை நிறைவுக்குக் கொண்டு வர வேண்டிய தேவை கிடையாது. ஏனெனில் அது விசேட சந்தப்பத்தில்தான் நிகழ வேண்டும். அதற்கான பாரம்பரியங்கள் இருக்கின்றன. ஆகவே தவறான, நோக்கத்துக்காக நாடாளுமன்றக் கூட்டத் தொடரை நிறைவுபடுத்துவது பிழையானது. நாடாளுமன்றக் குழுக்கள் சிலவற்றின் தலைவர்களை மாற்றுவதற்காக ஜனாதிபதி முதலில் இவ்வாறு நடந்துள்ளார். அதைச் செய்வதற்குத்தான் மீண்டும் இவ்வாறு முயற்சிக்கின்றார்கள் எனக் கருதுகின்றார்கள். இது பொருத்தமற்ற செயற்பாடு. அதனை நாம் எதிர்ப்போம்." - என்றார்.

அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனின் பெயர் பரிந்துரைக்கப்பட்ட போதும் அதற்கான நியமனம் ஏன் இன்னும் வழங்கப்படவில்லை என ஊடகவியலாளர் ஒருவர் கேட்டார். அப்போது சுமந்திரன் எம்.பி. கூறியவை வருமாறு:-

"சித்தார்த்தனின் பெயரை நாம் பரிந்துரைத்த போது எதிர்க்கட்சியில் இரண்டாவது பெரிய கட்சியாக தமிழரசுக் கட்சி - அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருந்தது. ஆகவே, அவருக்கு அந்த இடம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். துரதிஷ்டவசமாக அரச பக்கத்தில் இருந்த சிலர் எதிர்க்கட்சிப் பக்கம் வந்து எதிர்க்கட்சி உறுப்பினர்களாக அமர்ந்திருக்கின்றார்கள். அவர்களுடைய எண்ணிக்கை எங்களது எண்ணிக்கையை விடக் கூடுதலாக உள்ளது. அவர்கள் இந்தச் சந்தர்ப்பம் தங்களுக்கு இந்தப் பிரதிநிதித்துவ உரிமையைக் கொடுக்க வேண்டும் என்று கேட்பதனால் ஒரு முடிவு இல்லாமல் கூட்டம் நிறைவடைந்திருக்கிறது. சபாநாயகர் இது சம்பந்தமாக தெளிவான முடிவை எடுக்காமல் இருக்கின்றார். அந்தப் பிரதிநிதித்துவம் உங்களுக்குதான் என்று எங்களிடம் சொல்கின்றார்.

ஆனால், அதனை இதுவரை செய்யவில்லை. எதிர்க்கட்சித் தலைவரும் இணங்கியுள்ளார். மொட்டுக் கட்சியின் பொதுச் செயலாளரும் கூட இணங்கியிருக்கிறார். ஆகையால் நாடாளுமன்றத்தில் ஒரு தீர்மதானத்தைக் கூட நிறைவேற்றலாம். ஆனால், அது நிகழவில்லை. அண்மையில் நாடாளுமன்றத்தில் நான் இது தொடர்பில் பிரஸ்தாபித்தேன்.

1972 ஆம் ஆண்டு அரசமைப்புக் கொண்டு வரப்பட்ட போது ஒரு பேரினவாத சம்பவமாக எங்களைத் தேசிய வாழ்க்கையில் இருந்து புறக்கணித்து ஒதுக்கி வைத்தார்கள். அது திரும்பவும் நடைபெறுவதற்கான அறிகுறியாகத்தான் இதனைப் பார்க்கின்றேன்.

அரசமைப்புக் கவுன்ஸில் என்பது முக்கியமானது. அதில் வடக்கு - கிழக்கைப் பிரதிநிதித்துவப்படும் தமிழர் ஒருவர் கூட இல்லாமல் இருப்பது எங்களைத் தேசிய வாழ்க்கையில் இருந்து வெளியேற்றுவதற்கான ஒரு நடவடிக்கை எனக் கூறியுள்ளோம். இதனைத் தீர்ப்பதற்கான முயற்சி எடுத்துள்ளார்கள். இது தொடப்பில் வேறு எந்தவித மாற்றுத் தீர்வுக்கும் நாம் செல்ல மாட்டோம். எமது பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என நாம் நிர்ப்பந்தித்துள்ளோம்." - என்றார்.

### பேராசிரியர் யோகராசா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்., வடமராச்சி - கரணவாய் கிராமத்தில் பிறந்து, தலவாக்கலையில் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுத்து, மட்டக்களப்பில் வாழ்ந்து வந்த இவர் 1991 இல் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மொழித்துறை விரிவுரையாளராக இணைந்து, 2009இல் பேராசிரியராக நியமனம் பெற்று. 2014 இல் 23 வருட பல்கலைக்கழக பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

இவர் கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தால் காலாண்டுச் சஞ்சிகையாக 1982ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்டு வரும் 'கிழக்கொளி'யின் ஒவ்வொரு பதிப்பிலும், மட்டக்களப்பு பிரதேச அறிஞர்களைக் கண்டுபிடித்து வெளிக்காட்டிய பெருமைக்குரியவர்.

பேராசிரியர் மிகவும் நிதானமாக ஆராய்ந்து செயற்படும் குணாதிசயம் உடையவராக இருந்தார். விமர்சனங்களைப் பண்பாடாகவே முன்வைத்தார். எளிமையாக பழகும் சுபாபமே அவரது வலிமையாகும். அவர் சந்தித்த எல்லாவித நெருக்கடிகளுக்கும் மத்தியில் தனது இலக்கிய பணியையும், கற்பித்தல் பணியையும் தளராது முன்னெடுத்தார்

இவர் பல சர்வதேச நாடுகளில் நடைபெற்ற கருத்தரங்குகளில் கலந்து கொண்டு, பல ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தவர். ஈழத்து இலக்கிய வளர்ச்சியில், குறிப்பாக கிழக்கிலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் காத்திரமான பங்களிப்பை நல்கியமை குறிப்பிடத்தக்கது.

**நமது கருத்து**
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நரித் தந்திரப் போக்கு

இலங்கையின் பாதுகாப்புப் படைகளும், அதன் மூலம் நாட்டின் பாதுகாப்புத் துறையும் மோசமான பின்னடைவு காணும் நிலைமை ஏற்பட்டிருப்பதாக ஆளும் பொதுஜன பெரமுனவின் அதிருப்திக்குழு நாடாளுமன்ற உறுப்பினரான டலஸ் அழகப்பெருமா சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

கடந்த ஆண்டு ஜனவரிக்குப் பின்னர் இதுவரை 27 ஆயிரம் பேர் இலங்கை இராணுவத்தை விட்டு வெளியேறி இருக்கின்றனர் என்றும், இவர்களின் அநேகர் இராணுவத்தை விட்டுச் சொல்லிக் கொள்ளாமல் வெளியேறிய 'படை விட்டோடிகள்' என்றும், எஞ்சியோரில் பலர் 12 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய பின்னர் படையை விட்டு வெளியோறியோர் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ஒரேயடியான இந்த வெளியேற்றம் இராணுவத்தைப் பலவீனமாக்கும் என்பது அவரது கருத்து.

ஏற்கனவே, இந்த வருடத்தில் மட்டும் பத்தாயிரத்துக்கும் அதிகமானோர் முப்படைகளையும் விட்டோடியுள்ளனர் என்று புள்ளிவிவரங்கள் வெளியாகியிருந்தமை தெரிந்ததுதான்.

இதைத் தவிர இன்னொரு விடயத்தையும் டலஸ் அழகப்பெரும நாடாளுமன்றத்தில் வெளியிட்டிருக்கின்றார்.

பொலிஸின் தலைமைப் பதவியான பொலிஸ்மா அதிபர் நியமனத்தில் ரணில் விக்கிரமசிங்க அரசு இழுத்தடித்துக் குழப்ப நிலையை ஏற்படுத்தியமை போன்று, இராணுவத்திலும் தளபதிக்கு அடுத்த நிலையில் உள்ள 'இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரி' மற்றும் அதற்கு அடுத்த நிலையில் வரும் 'இராணுவத்தின் பிரதி சிரேஷ்ட அதிகாரி' ஆகிய பதவிகளுக்கும் புதியவர்களை நியமிக்காமல் காலத்தை இழுத்தடித்து வருகின்றது என அழகப்பெரும சுட்டுகின்றார்.

இராணுவத்தின் இரண்டாவது நிலையில் வரும் இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரி பதவிக்கு இப்படி உரியவர் நியமிக்கப்படாமல் நீண்ட காலம் இழுத்தடிக்கப்படுகின்றமை இதுவே முதல் தடவை என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

பொலிஸ்மா அதிபர் பதவிக்கு இன்னும் புதியவர் நியமிக்கப்படவில்லை. இதனால் இதுவரை இருந்த பொலிஸ்மா அதிபரின் பதவிக்காலம் அவரின் ஓய்வின் பின்னரும் ஆறு மாதங்களாக, நான்கு தடவைகள் நீடிக்கப்பட்டன. அதனை ஒட்டி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அரசமைப்புக் கவுன்ஸிலுக்கும் இடையில் நீண்ட இழுபறி கூட ஏற்பட்டது. இப்போதும் கூட, பதில் பொலிஸ்மா அதிபரே நியமிக்கப்பட்டிருக்கின்றார். பொலிஸ்மா அதிபர் நியமனம் இன்னும் இடம்பெறவில்லை.

தற்போதைய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விகும் லியனகேயின் பதவிக்காலம் கடந்த வருடம் டிசம்பர் 30 ஆம் திகதியுடன் முடிவடைய இருந்தது. அதை ஓராண்டுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீடித்தார். அது வரும் டிசம்பர் 31 ஆம் திகதி - இன்னும் 23 நாள்களில் - முடிவடைய இருக்கின்றது.

இக்காலகட்டத்தில் இராணுவத்தில் சிரேஷ்ட அதிகாரியாக இரண்டாவது நிலையில் இருந்தவர் மேஜர் ஜெனரல் டபுள்யூ.ஏ.ஏ.எஸ்.வனசிங்க. இராணுவத்தின் பீரங்கிப் படையின் கேணல் கொமாண்டன் அவர். முன்னாள் இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்கவின் புதல்வர். இவருக்குப் புதிய இராணுவத் தளபதி பதவி வழங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் கடந்த ஒக்டோபர் 13ஆம் திகதி ஓய்வில் செல்ல விடப்பட்டார்.

அதன் பின்னர் அவருக்கு அடுத்த நிலையில் பிரதி சிரேஷ்ட அதிகாரியாக இருந்தவர் மேஜர் ஜென்ரல் ஜி.ஆர்.ஆர்.பி.ஜெயவர்த்தனா. அவருக்கு சிரேஷ்ட அதிகாரி பதவி உயர்வு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் வழங்கப்படவில்லை. அவரும் கடந்த வாரம் டிசம்பர் முதலாம் திகதி ஓய்வில் அனுப்பப்பட்டார்.

இப்போது இராணுவத்தில் சிரேஷ்ட அதிகாரியும் இல்லை, பிரதி சிரேஷ்ட அதிகாரியும் இல்லை என்ற நிலைமை. தர நிலையில் - சிரேஷ்ட மூப்பு வரிசையில் - பின்னால் இருக்கும் யாரோ ஒருவரை முன்னுக்குக் கொண்டு வந்து, இராணுவத் தளபதி நிலை வரை உயர்த்துவதற்கு வசதியாகவே, இடையில் சிரேஷ்ட நிலையில் இருக்கும் அதிகாரிகளுக்கு புதிய பதவி உயர்வு நியமனங்களை வழங்காமல், அவர்கள் அந்தப் பதவி உயர்வுகள் மூலம் சேவைக் கால நீடிப்பு உரிமையை பெற்றுவிடாமல், அதனைத் தடுத்து, இப்படி இடையில் உள்ள பதவி நிலைகளுக்கு ஆள்களை நியமிக்காமல் இழுத்தடிக்கும் தந்திரம் பயன்படுத்தப்படுகின்றதோ என்று சில வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன.

தமது அரசியல் அதிகாரத்தின் கீழ், தாம் விரும்பிய எதையும் செய்வதற்காக, சட்டங்கள், வழக்கமான நடைமுறைகள், வழக்காறுகள், ஒழுங்கு முறைகள் எல்லாவற்றையும் தந்திரமாக மீறுவதில் வல்லவர் ரணில் விக்கிரமசிங்க. அதன் ஒரு பகுதியாக இத்தகைய நியமனங்கள் வழங்கப்படாத இழுத்தடிப்பும் அமையக்கூடும்.

# புயல் பாதிப்பு குறித்து தமிழக முதல்வரிடம் தொலைபேசியில் விசாரித்தார் பிரதமர் மோடி



'மிக்ஜம்' புயல் பாதிப்பு குறித்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பிரதமர் நரேந்திர மோடி கேட்டறிந்துள்ளார்.

'மிக்ஜம்' புயல் பாதிப்பு தொடர்பாக பிரதமர் மோடியுடன் தி.மு.க. எம். பி. டி.ஆர்.பாலு சந்தித்து பேசினார். மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டிற்கு இடைக்கால நிவாரணமாக 5,060 கோடி ரூபா வழங்கக் கோரிக்கை விடுத்துள்ளார். இடைக்கால நிவாரணம் கோரி பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுதிய கடிதத்தை டி.ஆர்.பாலு வழங்கினார்.

தமிழகத்தில் கடந்த 2, 3 மற்றும் 4 ஆகிய திகதிகளில் தாக்கிய 'மிக்ஜம்' புயல் காரணமாக பெய்த வரலாறு காணாத பெருமழையின் காரணமாக, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய நான்கு மாவட்டங்களில் மிக அதிகமான மழைப் பொழிவு பெறப்பட்டது.

இதன் காரணமாக, இந்த நான்கு மாவட்டங்களில், குறிப்பாக சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மிகக்கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. சாலைகள், பாலங்கள், பொது கட்டடங்கள் என பல்வேறு உட்கட்டமைப்புகள் சேதம் அடைந்துள்ளன.

மேலும், லட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் இதனால் பாதிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, தமிழகத்திற்கு இடைக்கால நிவாரணமாக குறிப்பிட்ட தலைப்புகளின் கீழ் 5,060 கோடி ரூபாவை உடனடியாக வழங்கிடுமாறு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பிரதமர் நரேந்திர மோடிக்கு புதன்கிழமை கடிதம் எழுதியிருந்தார்.

இந்த நிலையில், நாடாளுமன்ற வளாகத்தில் பிரதமர் நரேந்திர மோடியை நேரில் சந்தித்து முதல்வர் ஸ்டாலின் எழுதிய கடிதத்தை டி.ஆர்.பாலு வியாழக்கிழமை வழங்கினார்.

அப்போது தொலைபேசியில் ஸ்டாலினுடன் பிரதமர் மோடி பாதிப்பு குறித்து கேட்டறிந்தார். தமிழகத்திற்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என பிரதமர் நரேந்திர மோடி உறுதி அளித்துள்ளார்.

---

# தமிழக மக்கள் இயல்பு நிலைக்குத் திரும்ப மத்திய அரசு அனைத்து உதவிகளையும் செய்யும்

## - முதல்வரை சந்தித்த பின் மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் தெரிவிப்பு

தமிழக மக்கள் இயல்பு நிலைக்குத் திரும்ப மத்திய அரசு தேவையான அனைத்து உதவிகளையும் செய்யும் என்று மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

சென்னையில் புயல் பாதிப்புகளை ஆய்வு செய்ய மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் நேற்று சென்னைக்கு சென்றார். அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா ஆகியோர் அவரை வரவேற்றனர்.

தொடர்ந்து அமைச்சர் ராஜ்நாத் சிங், மிக்ஜம் புயல் பாதிப்புகளை இராணுவ ஹெலிகொப்டரில் சென்று ஆய்வு செய்தார். அவருடன் மத்திய இணையமைச்சர் எல். முருகனும் சென்றார்.

புயல் பாதிப்புகளை ஆய்வு செய்த பின்னர் மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங், சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்துப் பேசினார். தமிழகத்தில் புயல் பாதிப்பு, எடுக்கப்படும் மீட்பு நடவடிக்கைகள் குறித்து ராஜ்நாத் சிங்கிடம் முதல்வர் ஸ்டாலின் எடுத்துரைத்தார்.



இதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் ராஜ்நாத் சிங், "புயலால் தமிழக மக்கள் பாதிக்கப்பட்டது அறிந்து பிரதமர் மோடி கவலையுற்றார். தமிழக மக்களுக்குத் தேவையான நிவாரண உதவிகள் அனைத்தையும் மத்திய அரசு செய்யும். பிரதமரிடம் நான் தனிப்பட்ட முறையில் இதுகுறித்து பேசி கண்காணிக்குமாறு கூறியிருக்கிறேன்.

இராணுவம், கடற்படை, தேசிய மீட்புப்படை என அனைத்துத் துறையினரும் தீவிரமாக மீட்புப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

நானும் சென்னையில் ஆய்வு செய்த பின்னர், முதல்வரை சந்தித்துப் பேசியிருக்கிறேன். அதிகாரிகளிடமும் நிலைமை குறித்து கேட்டறிந்தேன்.

தமிழக மக்கள் இயல்பு நிலைக்குத் திரும்ப மத்திய அரசு தேவையான அனைத்து உதவிகளையும் செய்யும் என பிரதமரின் சார்பில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெள்ள நிவாரணத்திற்கு ரூ. 450 கோடி ரூபா மட்டுமின்றி சென்னை வெள்ள மேலாண்மை திட்டத்திற்கும் மத்திய அரசு 61 கோடி ரூபா நிதி வழங்கியுள்ளது" என்று தெரிவித்தார்.

# காசாவில் அகதிகள் முகாமை சுற்றி வளைத்த யுத்த தாங்கிகள்!



வடக்கு காசாவில் உள்ள ஜபாலியா அகதிகள் முகாமை இஸ்ரேலிய யுத்த தாங்கிகள் சுற்றி வளைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்த பகுதியில் கடுமையான போர் இடம்பெறுவதாக சர்வதேச ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுமார் ஒரு லட்சம் பேர் வரை மருத்துவ வசதிகள் இன்றி, அந்த முகாமில் இருக்கின்றனர் என ஹமாஸ் அறிவித்துள்ளது.

இரு தரப்பினருக்கும் இடையிலான தற்காலிக போர் நிறுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னர் வடக்கு காசாவிற்கு மனிதாபிமான உதவிகள் சென்றடையவில்லை.

அதேநேரம் காசாவில் மனிதாபிமான அமைப்புகள் சீர்குலைந்து விடும் நிலை உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்ரெஸ் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், அவரது கருத்துக்களை இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் எலி கோஹன் விமர்சித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பிரதானி அன்டோனியோ குட்ரெஸின் பதவி காலம் உலக அமைதிக்கு ஆபத்தானது எனவும் இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# சீசெல்ஸ் நாட்டில் பாரிய வெடிப்பு: நால்வர் பலி, அவசர நிலை பிரகடனம்!

சீசெல்ஸ் நாட்டின் பிரதான தீவான மாஹேவில் உள்ள தொழில்துறை பகுதியில் ஏற்பட்ட பாரிய வெடிப்பு மற்றும் வெள்ளம் காரணமாக அங்கு அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வெடிப்பு காரணமாக வணிக கட்டடங்கள் தரைமட்டமாகியுள்ளன. அருகிலுள்ள வீடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன. சம்பவத்தில் நான்கு இந்தியர்கள் உயிரிழந்துள்ளனர்.

எவ்வாறாயினும், சீசெல்ஸ் நாட்டில் தங்கியுள்ள இலங்கையர்கள் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனவும், அவர்கள் மாற்று இருப்பிடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், அத்தியாவசியத் தொழிலாளர்களைத் தவிர ஏனைய அனைவரையும் வீட்டிலேயே இருக்குமாறு சீசெல்ஸ் ஜனாதிபதி வேவல் ராம்கலவன் உத்தரவிட்டுள்ளார்.

சம்பவத்தில் ஏராளமானோர் காயமடைந்துள்ளனர் எனவும் மேலும் பலர் தங்கள் வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் நேரப்படி நேற்று அதிகாலை கட்டுமான நிறுவனத்தில் இருந்த மின்பிறப்பாக்கி ஒன்று வெடித்துள் ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக கட்டத்தின் அருகில் நான்கு கொள்கலன்களில் சேமித்து வைக்கப்பட்டிருந்த வெடிபொருள் களும் வெடித்துச் சிதறியுள்ளன.



சர்வதேச விமான நிலையம் சம்பவ இடத்தில் இருந்து 4 கிலோமீற்றர் தொலைவில் இருந்தாலும் அங்கும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகள் மூடப்பட்டதுடன், அவசரகால நிகழ்வுகளைத் தவிர மற்ற அனைத்தும் ரத்து செய்யப்பட்டுள்ளன. இதுதவிர, பாதுகாப்பு நிமித்தமாக மருத்துவமனைகளும் மூடப்பட்டுள்ளன.

சீசெல்ஸ் சர்வதேச விமான நிலையம் தொடர்ந்து செயற்படுவதுடன், தீவுகளுக்கு இடையேயான படகு சேவைகள் பார்வையாளர்களுக்காக இயக்கப்படுகின்றன.

இந்த நிலையில், மாஹே தீவில் உள்ள தனது குடிமக்கள் மறு அறிவித்தல் விடுக்கப்படும் வரை வீடுகளுக்குள்ளேயே தங்கியிருக்குமாறு பிரித்தானிய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இதனிடையே, ஒரே இரவில் பெய்த கனமழையால் கடுமையான வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. இதன்போது வீடுகள் இடிந்தமையால் மூன்று பேர் உயிரிழந்தனர்.

வெள்ளம் காரணமாக கழிவுநீர் கடலில் கலப்பதால் மக்கள் கடலில் நீராட வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். ஜனாதிபதி ராம்கலவன், இந்த இரட்டை பேரழிவுகளை நாட்டிற்கு 'பேரழிவு' என்று வர்ணித்துள்ளார்.

அதேநேரம் பாதிக்கப்பட்டவர்களுக்கு பொதுமக்கள், தமது ஒத்துழைப்பை காட்டவேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.




# கொடிகாமத்தில் வீதியில் இளைஞர் மீது தாக்குதல் நடத்திய வன்முறைக் கும்பல்

## வீடு தேடிச் சென்றும் வன்முறை

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் – கொடிகாமம் பகுதியில், வீதியில் இளைஞர் மீது தாக்குதல் மேற்கொண்ட வன்முறைக் கும்பல், இளைஞரின் வீட்டுக்கும் சென்று தாக்குதல் நடத்தியுள்ளது.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வெள்ளம்போக்கட்டி பகுதி வீதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த இளைஞரை வழிமறித்த வன்முறைக் கும்பல் இளைஞர் மீது சரமாரியாக தாக்குதல் நடத்தியுள்ளது.

அந்த இளைஞர் மோட்டார் சைக்கிளை வீதியில் கைவிட்டு, தாக்குதலாளிகளிடம் இருந்து தப்பியோடியுள்ளார். அதையடுத்து இளைஞரின் வீட்டுக்குச் சென்ற வன்முறைக் கும்பல் வீட்டினுள் அத்துமீறி நுழைந்து, வீட்டில் இருந்த உடைமைகளை அடித்து உடைத்து சேதப்படுத்திய பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த இளைஞர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில், சம்பவம் தொடர்பில், கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# புற்றுநோயாளர்களுக்கு உதவி கோரி பண மோசடி

## இரு பெண்கள் உட்பட மூவர் கைது

புற்றுநோயாளர்களுக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட பணத்தை மோசடி செய்த மூவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புற்றுநோயாளர்களுக்கான சிகிச்சைகளை வழங்குவதற்காக நிதி உதவி வழங்குமாறு கோரி சிலாபத்தைச் சேர்ந்த ஒருவர் சமூக ஊடகத்தில் பதிவிட்டுள்ளார்.

இதற்கமைவாக, நோயாளியின் வங்கிக் கணக்குக்கு நன்கொடையாளர்களால் 38 இலட்சம் ரூபா பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், சந்தேகநபர்களால் போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு, வங்கிக் கணக்கின் ஊடாக பண மோசடி செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

அவிசாவளை மற்றும் மஹியங்கனையை சேர்ந்த பெண்கள் இருவரும், ஆண் ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.




# தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை

மேல், தென், சப்ரகமுவ மற்றும் வட மத்திய மாகாணங்களில் பதிவாகும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதேவேளை, கண்டி மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருகின்றது என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 22 ஆம் திகதி முதல் இம்மாதம் 22 ஆம் திகதி வரை கண்டி மாவட்டத்தில் விசேட டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாட்டில் இதுவரை 78 ஆயிரத்து 322 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மழையுடனான காலநிலையில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்து வருகின்றது என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.




# அரச கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் மேலதிக நேர சேவைகளிலிருந்து விலகல்

அரச கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையில் மேலதிக நேர சேவையிலிருந்து விலகி ஆரம்பித்த தொழிற்சங்க நடவடிக்கை தொடர்கின்றது.

மேலதிக நேர கொடுப்பனவு குறைக்கப்பட்டதைக் கண்டித்து இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக அபேக்ஷா வைத்திசாலையில் கதிரியக்கப் பிரிவு சேவைகள் இடம்பெறவில்லை.

மேலதிக நேரக் கொடுப்பனவை சுகாதார அமைச்சு குறைத்துள்ளது எனவும், இதனைக் கண்டிக்கும் வகையிலேயே தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது எனவும் அரச கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்களின் சங்கத்தின் பிரதம செயலாளர் தர்மகீர்த்தி ஏப்பா தெரிவித்துள்ளார்.



# அமைச்சர் ஜீவனைச் சந்தித்த ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி

## பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல்

ஐக்கியநாடுகள்சபையின்இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிராஞ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

கொழும்பு – கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள அமைச்சில் நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது சமகால விடயங்கள் மற்றும் எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமை வழங்குவதற்காக முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டம் தொடர்பில் ஐ.நா. பிரதிநிதிக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் இதன்போது விளக்கமளித்தார்.

அத்துடன், மலையகத்துக்கான வீட்டுத் திட்டம், மலையக சமூக மேம்பாடு என்பனதொடர்பிலும்இருவருக்கும்இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. மலையகக் கல்வி மேம்பாடு குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், பெண்களுக்கான உரிமைகள், பெண்களின் சுகாதாரப் பாதுகாப்பு, சிறார் மற்றும் மகளிருக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்கான ஏற்பாடுகள், சிறுவர் தொழிலாளிகள் உருவாக்கப்படுவதைத் தடுத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

ஐ.நாவின் நிலைபேண்தகு அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சுத்தமான குடிதண்ணீர் இலக்கை அடைவதற்காக அமைச்சு முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளுக்குத் தேவையான உதவித் திட்டங்கள் குறித்து அமைச்சர் ஜீவன் தொண்டமான், ஐ.நா. பிரதிநிதிக்கு விளக்கமளித்தார்.

பொது தனியார் கூட்டாண்மை மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி, ஸ்மார்ட் தொழில்நுட்பம்என்பவற்றைநீர்வழங்கல் துறையில் பயன்படுத்தி, அதனை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.



# புதுக்குடியிருப்பில் வானுக்குள் புகுந்தது மோட்டார் சைக்கிள்!

## இளைஞர் ஒருவர் படுகாயம்

**(சண்முகம் தவசீலன்)**

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு – பரந்தன் பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று புதுக்குடியிருப்பு போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்புப் பகுதியில் இருந்து பரந்தன் பிரதான வீதியூடாகப் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது அதே பாதையில் பயணித்த பட்டா ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 22 வயது மதிக்கத்தக்க இளைஞர் படுகாயமடைந்துள்ளார். மோட்டார் சைக்கிள் வாகனத்துக்குள் புகுந்து கடும் சேதத்துக்குள்ளாகியுள்ளது.

படுகாயமடைந்த இளைஞர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 08.12.2023




இன்றைய நாள் சாதகமான விளைவுகளையும் மகிழ்ச்சியான தருணங்களையும் அளிக்கும். நீங்கள் பொழுது போக்கு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மகிழ்ச்சியடைவீர்கள்.

உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படும். அவர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். பணியில் உங்கள் செயல்திறன் திருப்திகரமாக இருக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இது இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்பட வழி வகுக்கும்.

நிதிநிலை திருப்திகரமாக இருக்கும். பணத்தை உங்கள் தேவைக்கேற்ப பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் மன உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உற்சாகமாக இருப்பீர்கள். இன்று நண்பர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். புதிய மனிதர்களை சந்திப்பீர்கள். இன்று முக்கியமான முடிவுகள் எடுக்கலாம்.

நீங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.உங்களின் சீரிய அணுகுமுறை மூலம் கடினமான பணிகளைக் கூட எளிதாக செய்து முடிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் திருப்தியான மனநிலை காரணமாக நீங்கள் உங்கள் துணையுடன் சிறந்த நட்பான அணுகுமுறை கொள்ள நேரலாம்.

இன்று நிதிநிலை மிகவும் திருப்திகரமாக இருக்கும். அதிக பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆற்றல் மூலம் உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

உங்களின் நேர்மறையான மன நிலை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்களின் ஆர்வத்தை மேம்படுத்தும் திட்டங்களை இன்று எடுக்கலாம். இசை கேட்பது மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபடுவது போன்றவை ஆறுதல் அளிக்கும். நம்பிக்கையான அணுகுமுறை சிறந்த பலனளிக்கும்.

இன்று அதிகப் பணிகள் காணப்படுவதால் பணிகளை சரியான குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. திட்டமிட்டு கவனமுடன் பணியாற்றினால் சிறப்பாக பணியாற்றலாம்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்படும். இந்த வேறுபாட்டை நீக்க நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். இன்று மகிழ்ச்சியாக இருக்க அவருடன் அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும்.

பணபுழக்கம் குறைவாக இருக்கும். வீண் விரயங்களை தவிர்க்க பணத்தை கவனமாக செலவு செய்ய வேண்டும்.

உங்களின் மன உளைச்சல் காரணமாக நீங்கள் கால் வலியால் அவதிப்படுவீர்கள்.




இன்று உங்கள் செயல்களில் கவனம் தேவை. சிறப்பாக திட்டமிட்டால் பதட்டமின்றி செயல்படலாம். முக்கிய முடிவுகளை தள்ளிப்போடவும்.

பணியிடத்தில் சகபணியாளர்களுடனான உறவுமுறையில் சில குழப்பங்கள் காணப்படும். அதனை சமாளித்து பணியாற்ற இன்று பொறுமை அவசியம்.

இன்று சிறிய விஷயங்களைப் பெரிதாகக் கொள்வீர்கள். உங்கள் குடும்ப விஷயத்தில் உங்கள் துணையுடன் சில சிக்கல்களை சந்திக்க நேரும். மனம் திறந்து பேசி வேறுபாட்டை களைவதன் மூலம் உறவில் நல்லிணக்கமும் புரிந்துணர்வும் ஏற்படும்.

நிதிநிலை சிறப்பாக இருக்காது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள நீங்கள் பணத்தை கடனாக வாங்குவீர்கள்.




உங்களின் திறமையான தகவல் பரிமாற்றம் மூலம் வெற்றிகரமான பலன் காண்பீர்கள். ஆன்மீக சொற்பொழிவு மற்றும் இறை மந்திரங்கள் ஜெபித்தல் ஆகியவற்றில் ஈடுபடுங்கள். இதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

உங்கள் பணியில் சிறந்த நல்ல பலன்கள் கிடைக்கும். பணியிடத்தில் உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் இருவரிடையே காணப்படும் நல்ல புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் வெளிப்படையாக மனம் திறந்து பேசுவீர்கள்.

நிதிநிலை திருப்திகரமாக இருக்கும். பணத்தை ஆன்மீக விஷயங்களுக்கு செலவு செய்யலாம்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்திருக்கும். ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது.




இன்று உங்களிடம் வருத்தமான மன நிலை காணப்படும். உங்கள் முயற்சிகள் மூலம் வெற்றிகரமான பலன்கள் கிடைக்காது. இதனை சுமையாகக் கருதுவீர்கள். முறையாக திட்டமிட்டால் வெற்றி பெறலாம்.

நல்ல வாய்ப்பு வழங்கும் வேலை மாற்றத்தை நீங்கள் வரவேற்கலாம். புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிக்க நீங்கள் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் துணையை மகிழ்விக்க சம்பவங்களை தீவிரமான போக்கில் எடுத்துக் கொள்வதை தவிர்க்க வேண்டும்.

தேவையற்ற செலவுகள் கவலையை அளிக்கும். பணத்தை முறையாக கையாள்வதன் மூலம் இதனை தவிர்க்கலாம்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்காது. தேவையற்ற கவலைகள் காரணமாக இன்று உங்கள் திறன் குறையும். என்றாலும் நம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி பெறலாம்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் அணுகுமுறையில் கவனம் தேவை.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் ஏற்படலாம். எனவே உங்கள் துணையுடன் பொறுமையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

தேவையற்ற செலவுகளின் சுமை காணப்படும். பணத்தை திட்டமிட்டு முறையாக கையாள்வதன் மூலம் இதனை தவிர்க்கலாம்.

உங்கள் தாய்க்கு கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. அவரின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.




இன்று பதட்டமும் வருத்தமும் காணப்படும். நீங்கள் உணர்ச்சிப்பூர்வமாகப் பேசுவீர்கள். இதனை தவிர்ப்பதன் மூலம் பாதகமான சூழ்நிலை ஏற்படாமல் இருக்கும். பிரார்த்தனை சிறந்த பலனைத் தரும்.

பணியிடத்தில் அதிகப் பணிகள் காணப்படும். அதனால் உங்கள் பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்களின் அகந்தைப் போக்கு காரணமாக உங்கள் துணையுடன் பிரச்சினை ஏற்படும். என்றாலும் மனம் திறந்த பேச்சின் மூலம் நன்மை விளையும்.

இன்று அதிக பொறுப்புகள் காரணமாக பணப்பற்றாக்குறை காணப்படும். எனவே செலவுகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

நரம்பு பாதிப்பு காரணமாக கணுக்கால் மற்றும் தோள்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 08.12.2023


தனுசு

இன்று சிறந்த மனநிலை காணப்படும். உங்கள் பணிகளை எளிதில் முடிப்பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும்.

உங்கள் பணியில் வெற்றி பெறுவீர்கள். குறித்த நேரத்திற்கு முன்பே உங்கள் பணிகளை முடித்து விடுவீர்கள்.

உங்கள் அன்பான வார்த்தைகளால் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இதனால் உங்கள் உறவில் மகிழ்ச்சி ஏற்படும்.

உங்கள் பணியில் நேர்மையாக இருப்பீர்கள். உங்கள் கடின உழைப்பிற்கு ஊக்கத்தொகை வகையில் பணம் பெறுவீர்கள்.

உங்கள் சார்பாக செயல்படும் நல்ல நேரம் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.


கும்பம்

இன்று நீங்கள் சிறந்த ஆற்றலுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். உங்கள் முடிவுகளில் கவனம் தேவை. நீங்கள் வீழ்ச்சியடையாமல் இருப்பதற்கு விவேகமாக நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளுடன் நல்லுறவு காணப்படாது. வேலை இழக்கும் வாய்ப்பு காணப்படுகின்றது.

உங்களிடம் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். நேர்மறையான அணுகுமுறை நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தும்.

உங்கள் அஜாக்கிரதை காரணமாக பண இழப்பு ஏற்படும். சேமிப்பதற்காக பணம் ஈட்டுவதை இன்று கடினமாக உணர்வீர்கள்.

இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.


மகரம்

இன்று உங்களிடம் ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படும். உங்கள் புத்திசாலித்தனத்தால் இன்று வெற்றி காண்பீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள்.

உங்கள் நேர்மை மற்றும் கடின உழைப்பு காரணமாக பணியிடச் சூழல் சுமூகமாக இருக்கும் உங்கள் செயல் திறன் திருப்திகரமாக இருக்கும். உங்கள் பணிகளை திறமையாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் அனுசரித்துப் போவதன் மூலம் நன்மை விளையும். நீங்கள் இருவரும் பரஸ்பரம் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். இன்றைய நாளை லாபகரமான முதலீடு செய்ய பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

இன்று உங்களிடம் காணப்படும் உற்சாகம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.


மீனம்

இன்று நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். இன்று சஞ்சலமான மனநிலையில் இருப்பீர்கள். இன்று தகுந்த முடிவுகளை எடுக்க இயலாது.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பதை கடினமாகக் கருதுவீர்கள். திட்டமிட்டு பணிகளை ஒழுங்கமைத்து செயலாற்றுவது சிறந்தது.

உங்கள் உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க நீங்கள் அமைதியான சகஜமான அணுகுமுறை மேற்கொள்ளவும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். குடும்பத்திற்காக அதிக பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும்.

தாயின் உடல்நிலை குறித்த கவலை இருக்கும். அவரின் ஆரோக்கியத்திற்காக நீங்கள் பணம் செலவு செய்ய நேரும்.






# அரச நிறுவனங்களின் செயற்பாடு பற்றி வழிகாட்டல்களை வெளியிடத் தீர்மானம்

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிப்பு



அரச நிறுவனங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது குறித்த வழிகாட்டல்களை வெளியிடவுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொலிஸ், சிறைச்சாலை, நன்னடத்தை நிலையம் ஆகியன தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு ஆணையாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதன் பின்னர் செயற்பட வேண்டிய விதம், உளநலம் பாதிக்கப்பட்ட நபரை வழிநடத்தும் விதம் மற்றும் சிகிச்சை அளித்தல் என்பன குறித்தும் வழிகாட்டல்கள் வெளியிடப்படும் என்றும் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

டிசம்பர் 10 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 11 ஆம் திகதி நடைபெறவுள்ள நிகழ்வில் இந்த வழிகாட்டல்களை வெளியிட எதிர்பார்ப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நிமல் புஞ்சிஹேவா மேலும் தெரிவித்துள்ளார்.



# நுரைச்சோலை 3 ஆவது மின்பிறப்பாக்கி தேசிய கட்டமைப்புடன் இணைக்கப்படாது

## மின்சார சபை அறிவிப்பு

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் மூன்றாவது மின்பிறப்பாக்கியின் பராமரிப்புப் பணிகள் நிறைவடைந்துள்ள போதிலும், அது உடனடியாக தேசிய கட்டமைப்புடன் இணைக்கப்படமாட்டாது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

நீர் மின் உற்பத்தி மேற்கொள்ளப்படுவதன் காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் பொறியியலாளர் நொயெல் பிரியந்த தெரிவித்தார்.

எவ்வாறாயினும் நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் மூன்றாவது மின்பிறப்பாக்கி செயற்படுத்துவதற்குத் தயார் நிலையில் உள்ளது என்றும் அவர் கூறினார்.

இலங்கை மின்சார சபையின் தரவுகளின் படி, நீர் மின் உற்பத்தி நிலையங்களுடன் தொடர்புடைய நீர்த்தேக்கங்களின் நீர் கொள்ளளவு 97.7 சதவீதமாக உயர்வடைந்துள்ளது.

கடந்த 5 ஆம் திகதி நாளாந்த நீர் மின்உற்பத்தி63வீதமாகவும்,அனல்மின் நிலையங்கள் ஊடாக 15.70 வீதமாகவும் மின்னுற்பத்தி மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை, நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் இரண்டாவது மின்பிறப்பாக்கி செயலிழந்துள்ளது.



# முழு நாட்டுக்கும் ஆபத்தாக மாறியுள்ள ஐ.நா. தீர்மானம்

## இணை அனுசரணை வழங்கியதன் விளைவே இது என்கின்றார் பீரிஸ்

"இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்குவதாக இலங்கை இணக்கம் தெரிவித்து விட்டு, அந்த இணக்கப்பாட்டை மீளப்பெற்றுக் கொள்வதாக அறிவிப்பது சாத்தியமற்றது. அரசியல் நோக்கத்துக்காக அன்று எடுத்த முடிவு இன்று முழு நாட்டுக்கும் வினையாகியுள்ளது."

– இவ்வாறு முன்னாள் வெளிவிவகாரத்துறை அமைச்சரும் சுயாதீன எதிரணி நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எவருக்கும் அடிபணியப் போவதில்லை, நாட்டின் உள்ளக விவகாரங்களில் வெளியாட்கள் தலையிட அனுமதிக்கப் போவதில்லை என்ற நாட்டின் வெளிவிவகார கொள்கையின் தன்மையை வெளிவிவகாரத் துறை அமைச்சர் இங்கு தெரிவித்தார். இதனை நான் ஏற்றுக்கொள்கிறேன். நானும் வெளிவிவகாரத்துறை அமைச்சராகப் பதவி வகித்தபோது இந்த நிலைப்பாட்டிலேயே உறுதியாக இருந்தேன்.

இலங்கையின் உள் விவகாரங்களில் சர்வதேசம் தலையிடும் சூழலை நல்லாட்சி அரசே உருவாக்கியது. இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்குவதாக இலங்கை இணக்கம் தெரிவித்ததைத் தொடர்ந்து இலங்கை தொடர்பில் தகவல் திரட்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு விசேட பொறிமுறையை உருவாக்கியது. அந்தப் பொறிமுறை தற்போது செயற்படுகின்றது.

இதேவேளை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தம் செய்யப்படும் வரை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான கைதுகள் இடம்பெறாது என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சர்வதேசத்துக்கு வாக்குறுதி வழங்கினார். வெளிவிவகாரத்துறை அமைச்சராக நான் அந்த வாக்குறுதியை உறுதிப்படுத்தினேன்.

சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதியை அரசு மீறியுள்ளது. அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜனநாயக ரீதியில் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் தற்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகின்றார்கள். இந்த விடயம் தொடர்பில் கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர்." – என்றார்.

# சிலாபம் மறை மாவட்டத்துக்குப் புதிய ஆயர்

சிலாபம் மறை மாவட்டத்தின் புதிய ஆயராக விமல்சிறி ஜயசூரிய ஆண்டகை நியமிக்கப்பட்டுள்ளார்.

பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸினால் புதிய ஆயர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி பேராயர் பிரையன் உடைக்வே ஆண்டகை இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

சிலாபம் மறை மாவட்ட ஆயராகக் கடமையாற்றிய வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை, கண்டி மறை மாவட்டத்துக்கான ஆயராக நியமிக்கப்பட்டதை அடுத்து, சிலாபம் மறை மாவட்ட ஆயர் பதவி வெற்றிடமாகியது.



# கற்பிட்டியில் 1230 கிலோ பீடி இலைகளுடன் இரண்டு இளைஞர்கள் வசமாகச் சிக்கினர்!







(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம், கற்பிட்டி – நுரைச்சோலை தேத்தாப்பொல பகுதியில் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட ஒருதொகை பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது, சந்தேகத்தின் பெயரில் புத்தளம் பகுதியைச் சேர்ந்த 25 மற்றும் 28 வயதுடைய இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடமேற்கு கடற்படை கட்டளையின் விஜய கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே இந்தப் பீடி இலைகள் கைப்பற்றுள்ளன.

நுரைச்சோலை – தேத்தாப்பொல பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மஹேந்திரா லொறியொன்றை கடற்படையினர் சோதனை செய்த போது, அந்த அந்த லொறியில் 41 மூடைகளில் அடைக்கப்பட்ட 1,286 கிலோ கிராம் பீடி இலைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

பீடி இலைகள் ஏற்றிய அந்த வாகனம் நுரைச்சோலை பகுதியிலிருந்து வேறு ஒரு பகுதிக்குக் கொண்டு செல்லத் தயாராக இருந்தது என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவ்வாறு கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட 1,286 கிலோ கிராம் பீடி இலைகள் மற்றும் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும், அவர்கள் பயணித்த லொறி என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக நுரைச்சோலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.


இதேவேளை, கற்பிட்டி – கீரிமுந்தல் களப்பு பகுதியில் சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 465 கிலோ கிராம் பீடி இலைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டிருந்தன.

மேலும், கடந்த மூன்று மாதங்களில் கற்பிட்டி பிரதேசத்தில் இப்பந்தீவு, கீரிமுந்தல், மாம்புரி, தேத்தாப்பொல மற்றும் தளுவ உள்ளிட்ட பகுதிகளில் இருந்து சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட பல கோடி ரூபா பெறுமதியான பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக்குச் சொந்தமான கடல் மற்றும் கரையோர பகுதியில் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுக்கும் வகையில் இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்தும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் 27 சிங்கள மீனவர்களுக்கு தனியான மீனவர் சங்கம் வேண்டுமாம்

## கடற்றொழில் திணைக்களத்துக்கு ஈ.பி.டி.பி. எம்.பியான திலீபன் கடிதம்



(ந.லோகதயாளன்)

மன்னார் மாவட்டம், கொண்டச்சிப் பகுதியில் வசிக்கும் 27 சிங்கள மீனவர்களையும் தனியான மீனவர் சங்கமாகப் பதிவு செய்து வழங்குமாறு மாவட்ட கடற்றொழில் திணைக்களத்துக்கு ஈ.பி.டி.பியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் எழுத்தில் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கொண்டச்சி கிராமத்தில் 2014 ஆம் ஆண்டு குடியேற்றப்பட்ட 52 சிங்களக் குடும்பங்களில் 27 பேர் மீன்பிடியை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்கின்றனர்.

இந்நிலையில், இவர்களுக்கெனத் தனியான ஒரு மீனவர் சங்கத்தைப் பதிவு செய்வதோடு அவர்கள் வாழும் இடத்தில் தனியான இறங்கு துறையையும் ஏற்படுத்திக் கொடுக்குமாறு மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளருக்கு திலீபன் எம்.பி. எழுத்தில் அறிவித்துள்ளார்.

இதேநேரம் இவ்வாறு தொழில் புரியும் 27 சிங்கள மீனவர்களுக்காகத் தனியான சங்கத்தை வழங்குவதற்கு அதன் அருகே நீண்டகாலத் தொழில் புரியும் தமிழ்பேசும் மீனவர் சமூகத்தினர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

# யாழ். பல்கலைக்கழக உதைபந்தாட்டம்

# சம்பியனானது சென். பற்றிக்ஸ்!



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் வெள்ளிவிழா உதைபந்தாட்டத்தில் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி சம்பியனானது!

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் இருபத்தைந்தாவது ஆண்டு வெள்ளி விழாவை முன்னிட்டு, பாடசாலைகளுக்கு இடையில் 19 வயதுக்குட்டவர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த நான்காம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்த இறுதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து சென். ஹென்றீஸ் கல்லூரி மோதியது.

பரபரப்பாக நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் இரு அணிகளும் குறிப்பிட்ட நேரத்துக்குள் கோல் எதையும் போடாமையால் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

இதனால் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில், சென். பற்றிக்ஸ் கல்லூரி 4 : 2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் வெள்ளிவிழா சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

# கற்பிட்டி பிரீமியர் லீக் கிரிக்கெட்

# வீரர்களுக்கான ஏலம் இன்று

(எம்.எச்.எம் சியாஜ்)




கற்பிட்டியில் வருடந்தோறும் நடைபெற்றுவரும் கற்பிட்டி பிரீமியர் லீக் (கே.பி.எல்) கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் ஜனவரி மாதம் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலை மைதானத்தில் பகல் – இரவு போட்டிகளாக நடைபெற உள்ளது.

இச் சுற்றுப் போட்டிக்கு கற்பிட்டியில் உள்ள கிரிக்கெட் கழகங்களிலிருந்து திறமையான விளையாட்டு வீரர்களைக் கொண்டு ஆறு அணிகள் ஆறு முகாமையாளர்களால் உருவாக்கப்பட்டு நிர்வகிக்கப்படும்.

அதன்படி எம்.என்.எம் முஆத்தின் முகாமைத்துவத்தின் கீழ் பூம்ஸ் அணியும் எம்.ஐ.எம் இஹ்லாஸின் முகாமைத்துவத்தின் கீழ் கங்காறூஸ் அணியும் என்.எம் மஹ்ரீனின் முகாமைத்துவத்தின் கீழ் மஹாசின்ஸ் அணியும் எம்.எப்.எம் றியாஸ் மற்றும் ஸம்ஸம் ஆகியோரின் முகாமைத்துவத்தின் கீழ் றைசிங் ஸ்டார் அணியும் எம்.எம் மில்ஹானின் முகாமைத்துவத்தின் கீழ் எம்.டி.எம். அணியும் கனிஷ்டனின் முகாமைத்துவத்தீன் கீழ் லியோ அணியும் போட்டியிவுள்ளன.

இந்த அணிகளுக்கான வீரர்களை ஏலத்தில் எடுக்கும் நிகழ்வு இன்று (08) கற்பிட்டியில் நடைபெறவுள்ளது. இந்த ஏலத்தில் கற்பிட்டியில் உள்ள சகல கிரிக்கெட் கழகங்களிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட திறமையான 102 கிரிக்கெட் வீரர்கள் ஏலம் விடப்பட வுள்ளனர். ஒவ்வொரு அணிக்கும் தலா 13 வீரர்கள் முகாமையாளர்களால் ஏலத்தின் மூலம் தேர்தெடுக்கப் படுவர்.